செய்தி வெளியீடு எண்: 371 நாள்: 08.06.2018

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (8.6.2018) முகாம் அலுவலகத்தில், பிரம்மா குமாரிகள் இயக்கம் நடத்தும் “எனது பாரதம் பொன்னான பாரதம்'' என்னும் தலைப்பில், அகில இந்திய (நடமாடும்) கண்காட்சி இளைஞர் பேருந்து பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார்கள்.

ஆக்கப்பூர்வ தன்மையின் அடிப்படையில் இளைஞர்களை சமுதாய மாற்றத்தின் முகவர்களாக ஆக்குவது, தூய்மையின் லட்சியத்தை மக்களிடம் பேணச் செய்தல், இளைஞர்களை யோகா மற்றும் தியானத்தின் மூலம் அறநெறிகளை வாழ்வில் கடைப்பிடிக்கச் செய்தல் ஆகியன பிரம்மா குமாரிகள் இயக்கத்தின் இளைஞர் பிரிவின் சார்பில் நடைபெறும் இளைஞர் பேருந்து பேரணியின் நோக்கமாகும்.

பிரம்மா குமாரிகள் இயக்கத்தின், அகில இந்திய (நடமாடும்) கண்காட்சி இளைஞர் பேருந்து பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை:

‘‘அகில இந்திய நடமாடும் கண்காட்சி இளைஞர் பேரணி பேருந்து துவக்க விழா. இந்நிகழ்ச்சியிலே கலந்து கொண்டுள்ள மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், முன்னாள் அமைச்சர் பெருமக்களுக்கும், இந்நிகழ்ச்சியிலே பங்கு பெற்று, இந்நிகழ்ச்சிக்காக பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற அத்தனை நண்பர்களுக்கும், முதற்கண் எனது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றையதினம், துவக்கி வைக்கப்படுகின்ற இந்தப் பேருந்து, கிட்டத்தட்ட 40 நாட்கள் தமிழகம் முழுவதும் பல்வேறு நகரங்களுக்குச் சென்று ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்றார்கள்.

இந்த நிகழ்ச்சியின் வாயிலாக, இளைஞர்கள் கிட்டத்தட்ட மொத்தம் 4 லட்சம் பேர் இந்த கண்காட்சியை கண்டு களிப்பார்கள் என்று இங்கே கூறியிருக்கின்றார்கள். அதிலே 3 லட்சத்து 80 ஆயிரம் இளைஞர்கள் பங்கு பெறுவார்கள் என்ற கருத்தையும் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இளைஞர்களுக்கு நல்ல ஒழுக்கம் கற்பிக்க வேண்டும். அந்த ஒழுக்கம் எவ்வாறு கற்பிப்பது என்பதைப் பற்றி விளக்கமாக, தெளிவாக, இங்கே இந்த பேருந்திலே, வரைபடத்தின் மூலமாக தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே,

நாம் கடைப்பிடிக்கின்ற ஒழுக்கம் எவ்வாறு இருக்க வேண்டும், அப்படி அந்த ஒழுக்கத்தை கடைபிடிக்கின்றபொழுது, எப்படி மனம் தூய்மை அடையும், அகதூய்மை, புறதூய்மை எப்படி அடையப்படும், அதோடு நல்லொழுக்கம் எப்படி கிடைக்கும், மன நிம்மதி எப்படி கிடைக்கும், ஒரு வளமான வாழ்க்கை எவ்வாறு அமைத்துக் கொள்ளப்படும் என்ற ஒரு அற்புதமான செய்தியை இந்தப் பேருந்திலே வரைபடம் மூலமாக இளைஞர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுகின்ற விதத்திலே இந்த பணியை துவக்கியிருக்கின்றார்கள். அது வெற்றியடைய என்னுடைய வாழ்த்துக்களை தெரிவிக்கின்றேன். நன்றி, வணக்கம்.''

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு பா.பாலகிருஷ்ணா ரெட்டி, முன்னாள் அமைச்சர் திருமதி கோகுல இந்திரா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 8.6.2018